பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை
04 03 2025 7 15
செவ்வாய்கிழமை இரவு

தலைப்புச் செய்திகள் –

1. பெல்ஜியம் இளவரசி **Astrid** இந்தியாவுக்கான 300 உறுப்பினர்கள் பொருளாதார குழுவை அமைத்திருப்பதை பிரதமர் திரு நரேந்திரமோடி வரவேற்றுள்ளார்.
2. சர்வதேச மகளிர் தினத்தையொட்டி மகளிர் மாதிரி கிராம பஞ்சாயத்துக்களை மத்திய அரசு நாளை தொடங்க உள்ளது.
3. தேர்தல் வழிகாட்டி நெறிமுறைகளை பின்பற்றி தேர்தல்கள் வெளிப்படைத் தன்மையுடன் நடைபெறுவதை மாநில தேர்தல் அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டுமென்று தலைமை தேர்தல் ஆணையர் திரு கியானேஷ்குமார் தெரிவித்துள்ளார்.
4. மக்கள் மருந்தகங்கள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கான இயக்கம் தொடங்கப்படும் என்று நித்தி ஆயோக் உறுப்பினர் திரு வி கே பால் தெரிவித்துள்ளார்.
5. சாம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட் போட்டியின் முதலாவது அரையிறுதியில் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஆட்டத்தில் 265 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இந்தியா தற்போது ஆடி வருகிறது.

இனி விரிவான செய்திகள் ---

**[]<<<>>>[]**

பெல்ஜியம் நாட்டின் இளவரசி **Astrid** இந்தியாவுக்கான 300 உறுப்பினர்கள் அடங்கிய பொருளாதார தூதுக்குழுவை அமைத்திருப்பதை பிரதமர் திரு நரேந்திரமோடி வரவேற்றுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், இந்த முயற்சியின் மூலம் இரு நாடுகளும் வர்த்தகம், தொழில்நுட்பம், பாதுகாப்பு, விவசாயம், திறன் மேம்பாடு, கல்வி உள்ளிட்ட துறைகளில் இணைந்து செயல்படுவதற்கான எண்ணற்ற வாய்ப்புகள் உருவாகி இருப்பதாகவும் கூறியுள்ளார்.

**[]<<<>>>[]**

கடந்த பத்து ஆண்டுகளாக உள்ளார்ந்த வளர்ச்சிக்கான திட்டங்களை வெளிப்படைத் தன்மையுடன் அரசு செயல்படுத்தி வருவதாக பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

சிறு குறு மற்று நடுத்தர தொழில்கள் தொடர்பான பட்ஜெட்டுக்குப் பிந்தைய இணைய வழி கருத்தரங்கில் உரையாற்றிய பிரதமர், சுயசார்பு இந்தியா என்ற இலக்கை எட்டும் நோக்கில் சீர்திருத்த நடவடிக்கைகளை விரைவுபடுத்தும் பணியில் மத்திய அரசு ஈடுபட்டுள்ளதாக கூறினார்.

நாட்டின் பொருளாதாரத்தை உயர் நிலைக்கு கொண்டு செல்வதில் சிறு குறு மற்றும் நடுத்தர தொழில்கள் முக்கிய பங்காற்றுவதாக பிரதமர் கூறினார்.

உற்பத்தி, ஏற்றுமதி மற்றும் அணுசக்தி திட்டங்களிலும், முதலீடு மற்றும் வர்த்தக ரீதியிலான சீர்திருத்தங்களைக் கொண்டு வருவதிலும் அரசு கவனம் செலுத்தி வருவதாக அவர் குறிப்பிட்டார்.

வளர்ச்சிக்கான நிலையான கொள்கையையும், வர்த்தகத்துக்கு உகந்த சூழ்நிலையையும் உருவாக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

பிரதமரின் விஸ்வகர்மா திட்டம் பற்றி குறிப்பிட்ட திரு நரேந்திரமோடி, பாரம்பரிய கைவினைக் கலைஞர்களுக்கு புதிய வாய்ப்புகள் இத்திட்டத்தின் மூலம் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அவர்களுக்குத் தேவையான கடனுதவி செய்து தரப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

முத்ரா திட்டத்தின் கீழ் கடந்த பத்து ஆண்டுகளில் மகளிர் மற்றும் இளம் தொழில் முனைவோர் பயன்பெற்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சிறு தொழில்களுக்கான கடன்கள் இருமடங்காக உயர்த்தப்பட்டிருப்பதாகவும் பிரதமர் கூறினார்.

உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத் தொகை திட்டத்தின் கீழ் 14-க்கும் மேற்பட்ட தொழில்கள் பயன்பெற்றுள்ளதாகவும், ஒரு லட்சத்து 50 ஆயிரம் கோடி ரூபாய அளவுக்கு முதலீடுகள் தரப்பட்டுள்ளதாகவும் திரு நரேந்திரமோடி தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

பிரசவத்தின்போது நேரிடும் உயிரிழப்பை ஒரு லட்சத்திற்கு 100-ஆக குறைக்க வேண்டும் என்ற இலக்கை தேசிய சுகாதார இயக்கம் எட்டியுள்ளதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா பெருமிதம் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற தேசிய சுகாதார இயக்கத்தின் ஒன்பதாவது வழிகாட்டுக் குழுவின் கூட்டத்தில் இதைத் தெரிவித்த அமைச்சர், சிசு மரண விகிதமும் கணிசமாக குறைக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

நாடு முழுவதும் ஒரு லட்சத்து 76 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் ஆரோக்கிய மையங்கள் சிறப்பாக செயல்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

தேசிய காசநோய் திட்டத்தின் கீழ் கடந்த 2015-ஆம் ஆண்டு முதல் 2023-ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் காசநோயின் பாதிப்பு 18 சதவீதம் குறைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

மக்கள் மருந்தகங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான இயக்கத்தை மத்திய அரசு தொடங்க உள்ளதாக நித்தி ஆயோக் உறுப்பினர் திரு வி கே பால் தெரிவித்துள்ளார்.

இம்மாதம் ஏழாம் தேதி மக்கள் மருந்தக தினம் கொண்டாடப்படுவதையொட்டி புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட மருந்துகளும், 300-க்கும் மேற்பட்ட அறுவை சிகிச்சை கருவிகளும் மக்கள் மருந்தகங்கள் மூலம் குறைந்த விலையில் விற்பனை செய்யப்பட்டு வருவகதாகக் கூறினார்.

மக்கள் மருந்தகங்களில் மிகக்குறைந்த விலையில், உயர் தரத்திலான மருந்துகள் கிடைப்பதாக அவர் தெரிவித்தார்.

தற்போது நாடு முழுவதும் 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மருந்தகங்கள் இயங்கி வருவதாக கூறிய திரு வி கே பால், 2027-ஆம் ஆண்டுக்குள் இதன் எண்ணிக்கையை 25 ஆயிரமாக உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

மக்கள் மருந்தகம் தொடங்கப்பட்டதிலிருந்து 30 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் கூடுதலாக மக்கள் தங்களது மருந்து செலவுகளை சேமித்திருப்பதாகவும் திரு வி கே பால் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

சர்வதேச மகளிர் தின கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக மகளிருக்கான மாதிரி கிராம பஞ்சாயத்துக்களை மத்திய பஞ்சாயத்துராஜ் அமைச்சகம் நாளை தொடங்குகிறது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் மாதிரி மகளிர் கிராம பஞ்சாயத்துக்கள் அமைய வேண்டும் என்ற முதன்மையான நோக்கத்துடன் இந்த திட்டம் கொண்டுவரப்பட உள்ளது.

நாளை புதுதில்லியில் இந்த திட்டத்தை தொடங்கி வைக்கும் நிகழ்ச்சியில் பஞ்சாயத்துராஜ் இணை அமைச்சர் திரு எஸ் பி சிங் பாதல், சுகாதாரத்துறை இணை அமைச்சர் திருமதி அனுப்பிரியா படேல் மற்றும் பல்வேறு அமைச்சகங்களின் பிரதிநிதிகள், சர்வதேச அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்கின்றனர்.

**[]<<<>>>[]**

நீடித்த வளர்ச்சிக்கான செயல்பாடுகளை அதிகாரிகள் முழுவீச்சில் செயல்படுத்த வேண்டுமென்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று குடியரசுத் தலைவர் மாளிகையில் பயிற்சி முடித்த இந்திய வருவாய்ப்பணி அதிகாரிகளிடையே உரையாற்றிய அவர், நாட்டின் உள்கட்டமைப்பு வளர்ச்சி பெற்றுள்ளதாகத் தெரிவித்த அவர், மின்னணு தகவல் தொடர்பு கட்டமைப்பு வலுப்படுத்தப்பட்டுள்ளதாகக் கூறினார்.

அனைத்து தரப்பினரும் பொருளாதார வாய்ப்புகளை பெறுவதற்கு மின்னணு கட்டமைப்பு பெரிதும் உதவுவதாக அவர் குறிப்பிட்டார்.

அரசு நிர்வாகத்திலும், நலத்திட்டங்களை செயல்படுத்துவதிலும் வருவாய்த்துறை அதிகாரிகளுக்கு முக்கிய பங்கு உள்ளதாகவும் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

தேர்தல் தொடர்பான நிலையான வழிகாட்டி நெறிமுறைகளையும் பின்பற்றி, அனைத்து தேர்தல்களையும் நியாயமாகவும், வெளிப்படைத் தன்மையுடனும் நடத்த மாநில தேர்தல் அதிகாரிகள் உறுதியுடன் செயல்பட வேண்டுமென்று தலைமை தேர்தல் ஆணையர் திரு கியானேஷ்குமார் கேட்டுக் கொண்டுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களின் தலைமை தேர்தல் அதிகாரிகள் மாநாட்டில் உரையாற்றிய அவர், மாவட்ட தேர்தல் அதிகாரிகள் வாக்குச்சாவடி நிலையிலான அலுவலர்கள் அனைவரையும் ஒருங்கிணைத்து தேர்தல் பணிகளை சுதந்திரமாகவும், நேர்மையாகவும் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்று கூறினார்.

தேர்தல் நடைபெறும் இடங்களில் அவ்வப்போது அனைத்துக் கட்சிக் கூட்டங்கள் நடத்தப்பட்டு கோரிக்கைகளுக்குத் தீர்வுகாண நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்றும் அவர் தெரிவித்தார்.

அனைத்துக் கட்சிக் கூட்டங்களில் எழுப்பப்பட்ட பிரச்சினைகள் குறித்தும், அதற்குக் தீர்வுகாண எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் அடுத்த மாத இறுதிக்குள் துணைத்தேர்தல் ஆணையரிடம் தலைமை தேர்தல் அதிகாரிகள் சமர்ப்பிக்க வேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

வாக்குச்சாவடிகளில், குறிப்பாக கிராமப்புற வாக்குச்சாவடிகளில் அனைத்து வசதிகளும் உறுதி செய்யப்பட வேண்டுமென்றும் திரு கியானேஷ்குமார் வலியுறுத்தினார்.

**[]<<<>>>[]**

மிசோராம் மாநிலத்தின் வரும் நிதி ஆண்டுக்கான பட்ஜெட்டை முதலமைச்சர் திரு லால்டு ஹோமா இன்று சட்டப்பேரவையில் தாக்கல் செய்தார்.

பேரவையில் இன்று பட்ஜெட்டை தாக்கல் செய்து பேசிய அவர், அரசின் வருவாய் செலவினம் 12 ஆயிரத்து 540 கோடி ரூபாயாக இருக்கும் என்று கூறினார்.

ஊதியம் மற்றும் ஓய்வூதியம் உயர்த்தப்பட்டதன் காரணமாக வருவாய் செலவினம் அதிகரித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

வருவாயை உயர்த்துவதற்கான வழிமுறைகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருவதாகவும் முதலமைச்சர் குறிப்பிட்டார்.

நடப்பு ஆண்டிற்கான துணை மானியக் கோரியக் கோரிக்கைகளையும் அவர் பேரவையில் தாக்கல் செய்தார்.

**[]<<<>>>[]**

சாம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட் போட்டியின் முதலாவது அரையிறுதியில் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஆட்டத்தில் 265 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடி வரும் இந்தியா சற்று முன் வரை 8 புள்ளி இரண்டு ஓவரில் -2 விக்கெட் இழப்புக்கு 43 ரன் எடுத்துள்ளது.
தொடக்க ஆட்டக்காரர்களான ஷுப்மன்கில் எட்டு ரன்னுக்கும், கேப்டன் ரோஹித் சர்மா 26 ரன்னுக்கும் ஆட்டமிழந்தனர்.
துபாயில் நடைபெற்று வரும் இப்போட்டியில் டாஸ் வென்று முதலில் பேட் செய்த ஆஸ்திரேலியா 49 புள்ளி மூன்று ஓவரில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 264 ரன் எடுத்தது,
முகமது ஷமி மூன்று விக்கெட்களை வீழ்த்தினார்.

***End of News***